ஆண்டறிக்கை

2020

லக்திவ என்ஜினியரிங்
(பிரைவேட்) லிமிட்டட

தூரநோக்கு

பயணிகளுக்கு மிகச் சிறந்த மற்றும் கவர்ச்சிகரமான
சேவைக்கான வசதிகளை வழங்குவதற்குப் பங்களிப்பு செய்தல்.

செயற்பணி

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு போன்றே தனி
நபர்களுக்குச் சொந்தமாக உள்ள சேதமடைந்த பேருந்துகளை
அவர்கள் பயணிகள் சேவையில்
இணைப்பதற்கு ஏற்ற வகையில் சலுகை
விலையிலும் உயர் தரத்திலும் பழுதுபார்த்தல்.

நிறுவனத் தகவல்

நிறுவனத்தின் பெயர் : லக்திவ என்ஜினியரிங் கம்பனி பிரைவேட் லிமிட்டட்

சட்டரீதியான உருவாக்கம் : 2007 இன் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2001 ஒக்டோபர் 01

கம்பனியின் பதிவு இல. : PV21948

தலைமை/பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல.73, மினுவாங்கொட வீதி, ஏக்கல, ஜா-எல

பணிப்பாளர் சபை :

திரு. குஷான் யஷோத வேகொடபொல – தலைவர்
திரு. டபிள்யூ.எம். டி. விஜயபண்டார – பணிப்பாளர்
திரு. நாமல் இந்திக்க லியனகே – பணிப்பாளர்
திருமதி. ஜமித்ரி அமரசேகர – பணிப்பாளர்
திரு. மொஹமட் பவுஸான் அன்வர் – பணிப்பாளர்
திரு. ஹேமந்த ராஜபக்ஷ – கம்பனி செயலாளர்

பதவியணியினர் :

திரு. கே.எஸ். அனுரகுமார - பொறியியலாளர்
திரு. கயான் சந்திரசிறி - கணக்காளர்
திருமதி. ஜே. அமரதிவாகர - நிர்வாக உத்தியோகத்தர்
திரு. மஞ்சுள சம்பத் - கணக்கீட்டு உத்தியோகத்தர்
திரு. எல். விஜேரத்ன - வழங்கல் உத்தியோகத்தர்

உள்ளடக்கம்

* அறிமுகம் -- 1

* நிறுவன நிர்வாகம்-- 2

* தலைவரின் மீளாய்வு -- 3

* குறிக்கோள்கள்--4

* மைல்கற்கள் --- 5

* செயலாற்றுகை --- 6

* செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்--- 7

* வருடாந்த கணக்கு அறிக்கை--- 8 - 29

* கணக்காய்வு அறிக்கை ---30 -38

* கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை
மற்றும் பதில்கள் ---39 -41

அறிமுகம்

1957 இன் 48 ஆம் இலக்க மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய அப்போதைய போக்குவரத்து அமைச்சராக இருந்த கௌரவ லெஸ்லி சைமன் குணவர்தன அவர்கள் 1970.11.20 ஆம் திகதி இலக்கம் 14933 கொண்ட வர்த்தமானி பத்திரிகையில் கட்டளை ஒன்றை வெளியிட்டதன் மூலம் ஓட்டோமொபைல் தனியார் (இலங்கை) லிமிடெட் எனும் பெயரில் இருந்த 24 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட காணியினை இலங்கை போக்குவரத்து சபையின் பயன்பாட்டிற்காக ஒப்படைத்து இந்த கம்பனியினை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

அதன் போது ஏக்கல மத்திய வேலைத் தளம் 1974.02.15 ஆம் திகதி அப்போதைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமராக இருந்த கௌரவ சினிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இருந்தே இந்த கம்பனி புதிய பேருந்து உடல் பாகம் பழுது பார்த்தல் போன்றே பழைய பேருந்துகளின் உடல் பாக பழுது பார்த்தல் அடிப்படை ரீதியில் மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலைத் தளம் இரு பிரிவுகளை கொண்டுள்ளதுடன், ஒரு வேலைத் தளம் மத்திய வேலைத்தளமாக செயற்பட்டதுடன், ஏக்கல வேலைத்தளம் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமானதாகும்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் 1993.06.14 ஆம் திகதி இந்த இரு வேலைத் தளங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஏக்கல என்ஜினியரிங் நடவடிக்கைகள் தொடர்பான தனியார் கம்பனியாக தனியார் மயப்படுத்தப்பட்டது.

பின்னர் இந்த தனியார் கம்பனி சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 400 கிரேட் வோல் பேருந்து செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. அதற்கு அமைய 2001 ஆம் ஆண்டு தொடக்கம் போக்குவரத்து அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனமான தனியார் கம்பனியாக அது முகமைத்துவப்படுத்தப்பட்டது. மேலும் பொருளாதார மேம்பாட்டினை உருவாக்கும் நோக்கத்துடன் பயிற்றுவிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளை இணைத்துக்கொண்டு நாட்டிற்குத் தேவையான பேருந்து உடல்களை உருவாக்குவதற்கு இந்த கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது.

நிறுவன நிர்வாகம்

வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் கம்பனியின் பணிப்பாளர் சபை, கம்பனி நிர்வாகத்தை உயர் தரத்தில் அர்ப்பணிப்புடன் மற்றும் பொறுப்புடன் கவனமாகப் பேணிச் செல்கின்றது. வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட்டினால் அதன் கம்பெனி நிர்வாக கொள்கைகள் மற்றும் பயன்பாடுகள் நவீன முறையில் திட்டமிடப்பட்டுள்ளது கம்பனியின் நீண்டகால பங்குதாரர்களின் பெறுமதியை உருவாக்குவதற்காக தமது தரப்பினருக்கு தமது பொறுப்புக்கள் தொடர்பில் கவனத்தை செலுத்தி உள்ளமை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக ஆகும்.

பங்குதாரர்கள், உண்மையான ஊழியர்கள், நீண்டகால வாடிக்கையாளர்கள், பிரதான வழங்குனர்கள் , விசுவாசமான வாடிக்கையாளர்கள் மற்றும் அதனை வினைத்திறனுடன் செயல்படுத்தும் ஏனைய தரப்பினர்களை நிர்வகித்தல் உள்ளிட்ட அதன் அனைத்து முக்கிய தரப்பினர்களது தேவைப்பாட்டினை கம்பனி இனம் கண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, கம்பனி சட்டத்தின் தேவைப்பாடுகளும் நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்பினுள் சமனாக கருதப்படுகின்றது. இந்தக் கூற்றின் மூலம் சபையினால் பின்பற்றப்படும் நிறுவன நிர்வாகக் கொள்கைகள், பயன்பாடு மற்றும் செயல்பாடு வரையில் உள்ளது. சபையின் பணிப்பாளர்கள் ஐந்து பேரைக் கொண்டுள்ளதுடன், அவர்களின் ஒருவர் நிறைவேற்றுப் பணிப்பாளராக உள்ளதுடன் ஏனைய நான்கு பேரும் நிறைவேற்று தரம் அல்லாத பணிப்பாளர்கள் ஆவர்.

வெற்றிகரமான வருடத்தினுள் சபையானது ஆகக் குறைந்தது நான்கு தடவைகள் கூடியுள்ளது. ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்னரும் கம்பனியின் செயலாற்றுகை, புதிய முதலீடுகள், மூலதன செயல் திட்டம் மற்றும் விசேட சபை அங்கீகாரம் தேவைப்படும் வேறு சிக்கல்கள் தொடர்பில் சபை பத்திரம் முன்கூட்டியே தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு நிகழ்ச்சி நிரல் உரிய அனைத்து முகாமைத்துவ தகவல்கள் மற்றும் பின்புலம் என்பவை பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். கம்பனியின் ஏனைய பணிப்பாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் வெளித்தரப்பினர்களுடன் தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணுதல், கொள்கை தொடர்பான காரணங்கள் தொடர்பில் தலைவர் பொறுப்புக் கூற வேண்டும். மொத்த வணிக, செயற்பாடு மற்றும் மூலோபாய அபிவிருத்திக்காக அவர் பொறுப்புக் கூற வேண்டும்.

தலைவரின் மீளாய்வு

ஒரு சவாலான காலப்பகுதியின் பின்னணியில் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தொலைநோக்கு பார்வைக்கு இணங்கியுள்ளதென நாங்கள் நம்பும் வகையில் லக்திவ எஞ்சினியரிங் நிறுவனத்திற்கான புதிய மாற்றத்திற்காக நாங்கள் தொடர்ந்து அயராது உழைத்து வருகிறோம்.

அடிப்படையில், இக் கம்பனி திறைசேரியில் உருவாக்கும் சுமையை முழுவதுமாக அகற்றுவதில் கவனம் செலுத்துகின்ற அதே நேரம் கிடைக்கும் வளங்கள் உகந்த வருமானத்தை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. இவை அனைத்தும், நமது எதிர்காலத்திற்கு திறவுகோலாக இருக்கும் இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் தத்துவத்தை கடைபிடிக்கும் போதாகும்.

பொது போக்குவரத்து மற்றும் சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகம மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் வழிகாட்டுதலுடன். அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் முன்வைக்கப்பட்ட சுபீட்சம் மற்றும் சிறப்பம்சங்களின் தொலைநோக்கிற்கு இணங்க இந்த திட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைச்சு எனக்கு பெரும் பலத்தை அளிக்கிறது.

குறிப்பாக, உலகளாவிய தொற்றுநோய் பொருளாதார நெருக்கடியின் போது அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உட்பட அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த நிராகரிக்கப்பட்ட வாகனங்களை திருத்தம் செய்வதற்கு எமது புதிய நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தி முகாமைசெய்தோம். இந்த வாகனங்களை மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் நாம் வைத்திருக்கும் சொத்துக்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுவதையும் மற்றும் அரசாங்கச் செலவினங்களைக் குறைக்க முடியும் என்பதையும் உறுதிசெய்ய முடியும்.

திறமையான குழுவொன்று இல்லாமல் இதெல்லாம் சாத்தியமில்லை என்பதுடன், தமது வேலையில் சுறுசுறுப்பாக இருப்பது மட்டுமல்லாமல், சவாலான காலகட்டங்களுக்கு ஈடுகொடுத்து இருக்கும் சிறந்த ஊழியர்களைக் கொண்டிருப்பது எனது அதிர்ஷ்டமே. லக்திவ எஞ்சினியரிங் (தனியார்) கம்பனி மீதான அவர்களின் அர்ப்பணிப்பை மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் திறமையான பணியாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளதால் நாம் அடைந்துள்ள முன்னேற்றம் நிலைத்திருக்கும். மேலும் நாம் விரும்பும் நாட்டைப் போலவே, லக்திவவின் எதிர்காலமும் செழிப்பானதாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.



குஷான் வேகொடபொல
தலைவர்,
லக்திவ எஞ்சினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,
ஏக்கல, ஜா-எல.

குறிக்கோள்கள்

- இ.போ.ச. பேரூந்துகளை பொதுமக்களுக்கு குறைந்த விலையிலும் உயர் தரத்திலும் வழங்குதல்.

- பொருளாதார அபிவிருத்திக்காக திறமையான முழுமையான வேலைப்படையொன்றை உருவாக்குதல்.

- வாகன பரிசோதனை செய்தல், ஓட்டுநர் மோட்டார் பொறிமு தொடர்பான பயிற்சி மற்றும் ஏனைய தொடர்புடைய துறைகளில் வணிகத்தை மேற்கொள்ளுவதற்கு முகாமைத்துவ ஆலோசகர்கள், கூட்டு முயற்சி முகவர்கள் மற்றும் பிரதிநிதிகளாக சேவைகளை வழங்குதல்.

- உற்பத்தி, பராமரிப்பு மற்றும் செயற்பாடு தொடர்பாக பயன்படுத்தக்கூடிய திறன் கொண்ட மோட்டர்களுக்காக வேறு பொருட்கள் மற்றும் அனைத்து பொருட்கள் மற்றும் சாதனங்கள் அல்லது திறன் கொண்ட இயந்திரங்கள், கூறு பாகங்கள், உதிரிப் பாகங்கள், மற்றும் பொருத்துக்கள் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், பொருத்துதல், வாடகைக்கு விடுதல், பழுதுபார்த்தல், மாற்றுதல் மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்தல்.

- வாகன திருத்துமிட உரிமையாளர்கள், வாடகை வண்டி, ஓம்னிபஸ், மோட்டார் கார், லொரி, மோட்டார் சைக்கிள் அல்லது ஏனைய அரச அல்லது தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள், தொழில் தலைவர்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள், வாகன திருத்துமிட நிர்மாணிப்பாளர்கள், அனைத்து வகையான மோட்டார் உதிரிப் பாகங்களின் விற்பனையாளர்கள், மோட்டார் மற்றும் இயந்திரவியல் பொறியியலாளர்கிளின் வியாபாரத்தை நடாத்திச் செல்லுவதற்கு, அனைத்து வகையான போக்குவரத்துக்களினதும் எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் விற்பனையாளர்கள் மற்றும் அனைத்து விபரங்கள் கொண்ட வாகனங்களை வாடகைக்கு வழங்குபவர்களின் வணிகத்தை நடாத்திச் செல்லுதல்.

- எண்ணெய், மின்சாரம், நீராவி, எரிவாயு அல்லது வேறு எந்த வகையிலும் தானியங்கி சக்தியின் மூலம் முன்னேறும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட எந்த வகையான வாகனங்களையும் உற்பத்தி செய்தல், பொருத்துதல், இறக்குமதி செய்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், பரிமாற்றம் செய்தல், மாற்றுதல் அல்லது மேம்படுத்துதல் மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்தல்.

- கம்பனியின் வணிகம் அல்லது செயற்பாடுகள் தொடர்பாக அல்லது பொதுவாக இதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களால் வழமையாக கையாளப்படுகின்ற அனைத்து வகையான பொறிகள், இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள், பாத்திரங்கள், பொருட்கள் என்பவற்றை உற்பத்தி செய்தல், பொருத்துதல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், பரிமாற்றம் செய்தல், மாற்றுதல், மேம்படுத்துதல், கையாளுதல், சந்தைக்கு தயார் செய்தல் மற்றும் வேறுவகையில் கொடுக்கல் வாங்கல் செய்தல்.

- பயணிகள் போக்குவரத்து வணிகத்தை பேணுதலும் மற்றும் செயற்படுத்துதலும் மற்றும் நாட்டின் எந்தப் பகுதியிலும் போக்குவரத்து வணிகத்தை நடாத்திச் செல்லுதல்.

மைல்கற்கள்


1974
ஏக்கல மத்திய வேலைத்தளம் தொடங்கப்பட்டமை.
1993
ஏக்கல என்ஜினியரிங் வேர்க்ஸ் தனியார்மயமாக்கப்பட்டமை
2001
லக்திவ என்ஜினியரிங் கம்பனி பிறைவேட் லிமிட்டட் கூட்டிணைக்கப்பட்டமை.
2014
பழுதுபார்க்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தமை
2020
ஆண்டிற்காக 144 பேருந்துக்களைப் பழுது பார்த்தல்

செயலாற்றுகை

வருமானம் (ரூபா. மில்லியன்)

ஆண்டு	2018	2019	2020
பழுதுபார்த்தல் வருமானம்	129	187	130



திருத்தம் செய்யப்பட்ட பேரூந்துகளின் எண்ணிக்கை

ஆண்டு	2018	2019	2020
திருத்தம்செய்யப்பட்ட பேருந்து (எண்ணிக்கை)	89	172	144



மொத்த சொத்துக்கள் (ரூபா. மிலலியன்)

ஆண்டு	2018	2019	2020
மொத்த சொத்துக்கள்	71	116	95



வரிக்குப் பின்னரான இலாபம் (ரூபா. மிலலியன்)

ஆண்டு	2018	2019	2020
வரிக்குப் பின்னரான இலாபம்	23	23	(26)



செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

➲ **நிதி அறிக்கையிடல்**

இந்த செயன்முறையின் நம்பகத்தன்மை மற்றும் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் நிலையான தன்மை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடனான அதன் இணக்கப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவம் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களுடன அதன் வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது கம்பனியால் பின்பற்றப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமை குழுவால் மீளாய்வு செய்து கலந்துரையாடப்பட்டது.

➲ **இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகள்**

குழுவினால் ஒவ்வொரு வணிகத் துறையிலும் எடுக்கப்பட்ட அல்லது கவனத்தில் கொள்ளப்பட்ட முக்கிய வணிக இடர்கள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை பெற்று மீளாய்வு செய்தது. குறிப்பாக கம்பனி, தொழிலாளர் பிரச்சனைகள், சம்பள அதிகரிப்பு போன்றவற்றால் கம்பனிக்கு ஏற்படும் நிதி தாக்கங்கள் குறித்து குழு ஆலோசித்து, சபையை தகுந்ததாக மதிப்பீடு செய்தது.

➲ **உள்ளகக் கணக்காய்வு**

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரால் கம்பனியின் உள்ளக கணக்காய்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. குழுவினால் உள்ளகக் கணக்காய்வாளர்களின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் அவர்களின் பரிந்துரைகளை முகாமைத்துவ பதில்களுடன் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டு சூழலை மேம்படுத்தும் வகையில் அந்த பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான முன்னேற்றம் தொடர்ந்து தொடர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது.

➲ **வெளியகக் கணக்காய்வு**

கம்பனியின் விடயப் பரப்பு மற்றும் கணக்காய்வு உத்தி மற்றும் கம்பனியின் சுமூகமான செயற்பாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இடர் காரணிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக கணக்கீட்டுகட குழு வெளியக கணக்காய்வாளர்களைச் சந்தித்தது.

➲ **முடிவுரை**

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள், செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகள் என்பன மூலம் கம்பனியின் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க முகாமை செய்யப்படுகின்றன என்பதற்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதுடன் கம்பனியின் சொத்துக்கள் போதுமானளவு பாதுகாக்கப்படுகின்றன என்பதற்கும் நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்றன என்பது தொடர்பில் கணக்காய்வுக் குழுவானது திருப்தியடைகின்றது.

ஒப்பம்
திரு. கே.எஸ்.எம்.டி சில்வா,
தலைவர்,
கணக்காய்வுக் குழு
31-12-2020

வருடாந்த
கணக்கு அறிக்கை

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்புக்கள்	31.12.2020 ரூபா.	31.12.2019 ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	4.1	27,075,878	29,038,933
கற்பனை சொத்துக்கள்	4.2	554,082	638,369
		27,629,960	**29,677,302**
நடைமுறை சொத்துக்கள்			
இருப்புக்கள்	5	45,477,946	59,727,894
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	6	10,277,684	13,593,242
வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்	7	618,096	980,604
நிலையான வைப்பு		6,581,859	6,144,119
காசு மற்றும் காசுக்கு சமமானவை	8	4,575,531	6,501,503
		67,531,116	**86,947,362**
மொத்த சொத்துக்கள்		**95,161,748**	**116,624,664**
உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்			
உரிமை மூலதனம்			
கூறப்பட்ட மூலதனம்		20	20
மூலதன ஒதுக்கம்		33,293,621	33,293,621
திரண்ட ஒதுக்கம்		19,636,203	46,683,719
மானியம்	9	11,269,863	9,198,630
		64,199,707	**89,175,990**
நடைமுறையல்லா பொறுப்பு			
ஓய்வூதிய நலன் கடப்பாடு - பணிக்கொடை	10	10,788,550	5,991,415
நடைமுறை பொறுப்புக்கள்			
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	11	20,172,819	21,457,259
		20,172,819	**21,457,259**
மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்		**95,161,076**	**116,624,664**

7 முதல் 16 வரையிலான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
இந் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்படுகின்றன.

சபைக்காகவும் அதன் சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட இந் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.

....	....	....
සභාපති	අධ්‍යක්ෂක	ගණකාධිකාරී
CHAIRMAN GOVERNMENT OWNED ...DIYA ENGINEERING CO. (PVT) LTD EKALA, JA-ELA	Director LAKDIWA ENGINEERING COMPANY (PVT) LTD No. 73, Minuwangoda ... Ekala, Jaela	Accountant Government owned LAKDIWA ENGINEERING COMPANY ...

2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று

	குறிப்புக்கள்	2020 ரூபா.	2019 ரூபா.
வருமானம்	12	130,487,008	187,762,153
விற்பனை கிரயம்	13	(124,163,626)	(129,579,002)
மொத்தலாபம்		6,323,382	58,183,151
ஏனைய வருமானம்	14	1,234,810	6,021,617
		7,558,192	64,204,768
நிர்வாக செலவினங்கள்	15	(33,754,766)	(38,777,939)
விநியோக கிரயங்கள்	16	(76,095)	(1,337,503)
நிதி கிரயங்கள்	17	(53,613)	(132,989)
வரிவிதிப்பிற்கு முன்னரான இலாபம்		(26,326,283)	23,956,337
வருமான வரி செலவினம்	18	-	-
வரி விதிப்பிற்குப் பின்னரான இலாபம்		(26,326,283)	23,956,337
ஏனைய விரிவான வருமானம்		-	-
காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்		**(26,326,283)**	**23,956,337**

குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் குறிக்கின்றன.

2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று

	கூறப்பட்ட மூலதனம்	மூலதன ஒதுக்கம்	திறைசேரி மானியம்	திரண்ட ஒதுக்கம்	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	20	33,293,621	9,198,630	46,683,719	89,322,101
ஆண்டிற்கான இலாபம்		-	-	(26,326,283)	(26,326,283)
மானிய காலக்கழிவு ஒதுக்க தொகை			721,233	(721,233)	
மானிய காலக்கழிவு			(650,000)		(650,000)
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	**20**	**33,293,621**	**9,269,863**	**19,636,203**	**62,345,818**

2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான விளக்கக் குறிப்புக்கள்

	2020 ரூபா	2019 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்		
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	(26,326,283)	23,956,337
சீராக்கங்கள்:		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு	2,373,455	1,268,346
மென்பொருள் காலக்கழிவு	84,287	51,698
பணிக்கொடை ஏற்பாடு	-	58,467
மானிய காலக்கழிவு	(437,740)	(502,688)
வட்டி வருமானம்	-	(146,111)
தண்டப்பண நிதிய சீராக்கம்	71,233	(801,370)
தொழிற்படு மூலதன மாற்றங்களிற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)	(24,235,048)	23,884,680
தொழிற்படு மூலதன சீராக்கங்கள்:		
இருப்புகளில் ஏற்பட்ட (அதிகரிப்பு)/குறைவு	14,249,948	(21,257,319)
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் (அதிகரிப்பு)/குறைவு	3,315,558	(11,684,268)
வைப்புக்கள் மற்றும் முற்பணங்களில் குறைவு/(அதிகரிப்பு)	362,508	(150,829)
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு/(குறைவு)	(1,284,440)	(15,403,707)
செலுத்தப்பட்ட பணிக்கொடை அதிகரிப்பு/(குறைவு)	4,075,901	
	20,719,475	(17,688,707)
செயற்பாடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசு	(1,668,779)	6,195,973
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(1,846,794)	(3,600,913)
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய/ (பயன்படுத்தப்படும்) தேறிய காசு	(3,515,572)	2,595,060
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(410,400)	(14,958,074)
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு	(410,400)	(14,958,074)
நிதி நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்		
பெறப்பட்ட மானியம்	-	10,000,000
நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு	-	10,000,000
காசு மற்றும் காசிற்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/(குறைவு).	(3,925,972)	(2,363,014)
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவை	6,501,503	8,864,517
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவை	2,575,531	6,501,503
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் பகுப்பாய்வு		
கையிலுள்ள காசு	2,575,531	6,501,503
வங்கி மேலதிகப்பற்று	-	-
	2,575,531	6,501,503

1. **பொதுவான தகவல்**

1.1 அமைப்பு மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பு

வரையறுக்கப்பட்ட லக்திவ எஞ்சினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டானது இலங்கையினுள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 73, மினுவாங்கொட வீதி, ஏக்கல, ஜா-எல எனும் இடத்தில் அமைந்துள்ளதுடன் பிரதான வர்த்தக இடமும் அதே இடத்தில் அமைந்துள்ளது. கம்பனி 2011 ஓகஸ்ட் 15 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது.

1.2 முதன்மை செயற்பாடு மற்றும் செயற்பாட்டின் தன்மை

கம்பனியானது இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை பழுதுபார்க்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறது.

.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் கம்பனியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 104 ஆக காணப்பட்டது. (2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் அது 104 ஆகக் காணப்பட்டது)

1.4 நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கான அங்கீகாரம் வழங்குதல் மற்றும் வெளியிட்டதன் பின்னர் திருத்தம் செய்தல்

இந்த நிதிக்கூற்றுக்கள் 2019 செப்டெம்பர் மாதம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடுவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. LKAS-08 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களை திருத்தம் செய்வதற்கான அதிகாரத்தை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது; இந்த விடயத்தினை நிறுவனம் வெளிப்படுத்த வேண்டும்.

2. **தயாரிப்பின் அடிப்படை**

2.1 இணக்கக் கூற்று

கம்பனியின் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பன இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRSs) இணங்கவும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளிற்கு இணங்கவும் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 அளவீட்டின் அடிப்படை

நிதிக்கூற்றுக்களில் உள்ள பின்வரும் உருப்படிகளைத் தவிர கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரய முறையின் கீழ் தயாரிக்கப்படுகின்றன. சரக்கிருப்புக்கள் வழமையாக கிரயம் மற்றும் தேறக்கூடிய நிகரப் பெறுமதி என்பவற்றில் குறைந்ததில் கொண்டு செல்லப்படுகின்றன. நிதிக் கருவிகள் (காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் கொண்டுசெல்லப்படுபவை உட்பட) நிதிக்கூற்றுக்களை பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

நடப்பாண்டு சமர்ப்பிப்பிற்கு இணங்குவதற்கு தேவையான போதெல்லாம் முன்னைய ஆண்டு

புள்ளிவிபரங்கள் மற்றும் சொற்றொடர்கள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 செயற்பாட்டு மற்றும் காட்சிப்படுத்தல் நாணயம்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள், கம்பனி செயற்படுகின்ற முதன்மைப் பொருளாதாரச் சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி (செயற்பாட்டு நாணயம்) அளவிடப்படுவதுடன் கிட்டிய ரூபாய் பெறுமதிக்கு எடுக்கப்படுகிறது.

இந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவது கம்பனியின் செயற்பாட்டு மற்றும் காட்சிப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாயில் (ரூபா)ஆகும்.

2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்களின் பயன்பாடு

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு கணக்கீட்டுக் கொள்கைகளின் பயன்பாடு மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் என்பவற்றை பாதிக்கும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் தேவைப்படுகின்றது.

மதிப்பீடுகள் மற்றும் முக்கிய எடுகோள்கள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்பட்ட காலப்பகுதியிலும் மற்றும் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்காலங்களிலும் இனங்காணப்படுகின்றன.

2.6 பொருண்மை தன்மை மற்றும் திரட்சித் தன்மை

இதே போன்ற உருப்படிகளின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்படுகின்றன. வேறுபட்ட தன்மை அல்லது செயற்பாட்டின் உருப்படிகள் அவை பொருண்மையற்றவையாக இல்லாவிட்டால் தனித்தனியாக காட்டப்படுகின்றன.

3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்க தயாரிக்கப்படுகின்றன. இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முதன்மை கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகள் வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால் வழங்கப்பட்ட அனைத்து ஆண்டுகளுக்கும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

3.1 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் / நாணயமாற்று

வெளிநாட்டு நாணயங்களில் பூர்த்தி செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அக் கொடுக்கல்வாங்கல் திகதியில் தீர்மானிக்கப்படுகின்ற அந்நிய செலாவணி விகிதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகின்றன. குறிப்பிட்ட நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் உள்ளவாறு வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட பண சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத் திகதியில் தீர்மானிக்கப்படுகின்ற அந்நிய செலாவணி விகிதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகின்றன. நாணயமாற்றம் தொடர்பாக எழுகின்ற அந்நியச் செலாவணி வேறுபாடுகள் இலாபம் அல்லது நட்டமாக இனங்காணப்படுகின்றன. வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்ற வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட நாணயமற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கொடுக்கல் வாங்கல் திகதியில் தீர்மானிக்கப்படுகின்ற அந்நிய செலாவணி விகிதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகின்றன.

4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஒரு வருடத்திற்கும் மேலாக நிர்வாக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கும் மற்றும் நிர்வாக நோக்கத்திற்காக தற்போது பயன்படுத்தும் அதற்கு சொந்தமான சொத்துக்களுக்கான கணக்கீட்டின் போது அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் கீழ் கம்பனி கணக்கீடு செய்யப்படுகின்றது.

4.1.1 இனங்காணப்படும் அடிப்படை

சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நலன்கள் கம்பனிக்கு கிடைக்கும் மற்றும் சொத்தின் கிரயம் நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும் சாத்தியத்தன்மை காணப்பட்டால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் இனங்காணப்படுகின்றன.

4.1.2 அளவீடு

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் கிரயத்தில் (அல்லது நியாயமான பெறுமதியில்) திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட நட்டக்கழிவு இழப்புக்கள் ஏதேனும் இருந்தால் அவை கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன.

4.1.3 சொந்தமான சொத்துக்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயமானது சொத்தை கையகப்படுத்துவதற்கு நேரடியாக பங்களிக்கின்ற செலவினங்களை உள்ளடக்குகின்றது. அத்தகைய கிரயங்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மாற்றுவதற்கான கிரயம் மற்றும் இனங்காணும் அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டால் நீண்டகால நிர்மாண செயற்திட்டங்களுக்கான கடன் கிரயங்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயத்தில் மூலப்பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு, சொத்துக்களை அதன் குறித்துரைக்கப்பட்ட பயன்பாட்டிற்காக செயற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய வேறு ஏதேனும் கிரயம் மற்றும் உருப்படிகளை துண்டுகளாக்கி அகற்றுவதற்கும் அவை அமைந்துள்ள தளத்தை மீட்டெடுப்பதற்கும் ஏற்படும் கிரயங்கள் என்பன உள்ளடங்குகின்றன. கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருளானது அவற்றுடன் தொடர்புடைய உபகரணங்களின் செயற்பாட்டிற்கு ஒருங்கிணைந்ததாக இருக்கும் போது அந்த உபகரணத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் இடைவெளியில் மாற்றப்பட வேண்டியிருக்கும் போது குறிப்பிட்ட பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வுடன் கூடிய தனிப்பட்ட சொத்துக்களாக (முக்கிய கூறுகள்) அத்தகைய பகுதிகளை நிறுவனம் இனங்காணுகின்றது. அதேபோல், முக்கியமான பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்படும் போது, இனங்காணும் அளவுகோல்கள் திருப்திகரமாக இருந்தால் பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் தொகையில் அதன் கிரயம் இனங்காணப்படுகின்றது. ஏனைய அனைத்து திருத்த மற்றும் பராமரிப்பு கிரயங்களும் ஏற்பட்டவாறு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. அதன் பயன்பாட்டிற்குப் பின்னர் சொத்தை நீக்குவதற்காக எதிர்பார்க்கப்படும் கிரயத்தின் தற்போதைய பெறுமதி நிதியேற்பாடு ஒன்றிற்காக இனங்காணப்படும் அளவுகோல்களை பூர்த்தி செய்தால் அந்தந்த சொத்தின் கிரயத்தில் உள்ளடக்கப்படும்.

குறிப்பு – காணி மற்றும் கட்டிடமானது கம்பனியின் சொந்தமான ஆதனம் அல்ல (மத்திய போக்குவரத்து சபை சட்டப்பூர்வ உரிமைத்துவத்தை கொண்டுள்ளது)

பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு

பெறுமானத்தேய்வு

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பிடப்பட்ட பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் மீது நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பெறுமானத்தேய்வு இனங்காணப்படுகிறது.

வகை	ஆண்டுகளின் எண்ணிக்கை	வீதம் %
கட்டிடங்கள்	20	5
மோட்டார் வாகனம்	5	20
தளபாடம் மற்றும் பொருத்துக்கள்	10	10
கணனி மற்றும் துணைக் கருவிகள்	3	33.33
பொறி மற்றும் இயந்திரம்	10	10

காலக்கழிவு

தனித்தனியாக சுவீகரிக்கப்பபட்ட அருவ சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலின் அடிப்படையில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வணிக கலவையொன்றில் பெறப்பட்ட அருவ சொத்துக்களின் கிரயமானது சுவீகரிக்கப்பட்ட திகதியில் அவற்றின் நியாயமான பெறுமதியாக காணப்படுகின்றது. ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து, அருவ சொத்துக்கள் கிரயத்தில் ஏதேனும் திரட்டிய நட்டக்கழிவு மற்றும் திரட்டிய நட்டக்கழிவு இழப்புக்கள் கழிக்கப்பட்டு கொண்டுசெல்லப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்தி கிரயங்கள் தவிர்ந்த உள்நாட்டில் உருவாக்கப்பட்ட அருவச் சொத்துக்கள் மூலதனமாக்கப்படாததுடன் தொடர்புடைய செலவினமானது, செலவினம் ஏற்படும் காலக்கட்டத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் பிரதிபலிக்கிறது.

அருவ சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வரையறுக்கப்பட்டோ அல்லது காலவரையறையற்றதாகவோ மதிப்பிடப்படுகிறது. காலவரையற்ற பயன்தரு ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் காலக்கழிவிடப்படுவதில்லை, ஆனால் தனித்தனியாகவோ அல்லது பணத்தை உருவாக்கும் அலகு மட்டத்திலோ வருடாந்தம் நட்டக்கழிவிற்காக பரிசோதிக்கப்படுகின்றன. காலவரையறையற்ற ஆயுட்கால மதிப்பீடு காலவரையறையற்ற ஆயுட்காலம் தொடர்ந்து ஆதரிக்கப்படுகிறதா என்பதைத் தீர்மானிப்பதற்காக வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது. இல்லையெனில், காலவரையறையற்றதில் இருந்து வரையறுக்கப்பட்ட காலத்திற்கு எதிர்கால அடிப்படையில் பயன்தரு ஆயுட்காலத்தில் மாற்றம் செய்யப்படுகிறது.

4.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள்
புதிய மற்றும் திருத்தப்பட்ட நியமங்கள் மற்றும் விளக்கங்கள்

கம்பனி முதன்முறையாக இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் (SLFRS) 15 மற்றும் 09 ஐப் பிரயோகித்தது. இந்த புதிய கணக்கீட்டு நியமங்களை பின்பற்றியதன் விளைவாக ஏற்படும் மாற்றங்களின் தன்மை மற்றும் விளைவு கீழே விபரிக்கப்பட்டுள்ளது;

ஏனைய சில திருத்தங்கள் மற்றும் விளக்கங்கள் 2018 இல் முதல் முறையாக பயன்படுத்துகின்ற போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் தாக்கம் எதனையும் ஏற்படுத்துவதில்லை. வெளியிடப்பட்டிருந்த போதிலும் இன்னும் செயற்பாட்டிற்கு வராத எந்தவொரு நியமங்களையும், விளக்கங்களையும் அல்லது திருத்தங்களையும் கம்பனி முன்கூட்டியே பின்பற்றியிருக்கவில்லை.

இநிஅநி 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

இநிஅநி 15 ஆனது இநிஅநி 11 நிர்மாண ஒப்பந்தங்கள், இநிஅநி 18 வருமானம் மற்றும் தொடர்புடைய விளக்கங்களை மாற்றியமைக்கிறதுடன் இது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்து கிடைக்கின்ற அனைத்து வருமானங்களுக்கும் வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுடன் பிரயோகிக்கப்படுகின்றது. SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தைக் கணக்கீடு செய்வதற்கு ஐந்து-படிமுறை மாதிரியை நிறுவுகிறதுடன் ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கு ஈடாக நிறுவனமொன்று எதிர்பார்க்கும் உரிமையை பிரதிபலிக்கும் ஒரு தொகையில் வருமானம் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

நிறுவனங்கள் அவர்களது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களுக்கு மாதிரியின் ஒவ்வொரு படிமுறையையும் பயன்படுத்தும் போது தொடர்புடைய அனைத்து உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தீர்ப்பைப் பயன்படுத்துவதை இநிஅநி 15 ஆனது தேவைப்படுத்துகின்றது. ஒப்பந்தமொன்றை பெறுவதற்கான அதிகரிக்கும் கிரயங்கள் மற்றும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு நேரடியாக தொடர்புபட்ட கிரயங்களுக்கான கணக்கீட்டையும் நியமம் குறிப்பிடுகிறது. மேலும் நியமம் விரிவான வெளிப்படுத்தல்களை தேவைப்படுத்துகின்றது.

கம்பனி இநிஅநி 15 ஐப் பின்பற்றி 2018 ஜனவரி 1 இன் ஆரம்ப விண்ணப்ப திகதியுடன் மாற்றியமைக்கப்பட்ட பின்னோக்கிய முறையைப் பயன்படுத்தியது. இந்த முறையின் கீழ், ஆரம்ப விண்ணப்பத்தின் திகதியில் உள்ள அனைத்து ஒப்பந்தங்களுக்கும் அல்லது அத் திகதியில் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தங்களுக்கு மாத்திரமே நியமத்தைப் பயன்படுத்த முடியும். 2018 ஜனவரி 01 இற்குள் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தங்களுக்கு மாத்திரமே நியமம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இநிஅநி 15 ஐப் பயன்படுத்துவதன் ஒட்டுமொத்த விளைவு ஆரம்ப விண்ணப்ப திகதியில் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்தின் ஆரம்ப மீதிக்கான சீராக்கமாக இனங்காணப்படுகின்றது. ஆகையால் ஒப்பீட்டுத் தகவல் மீண்டும் குறிப்பிடப்படாததுடன் இநிஅநி 11, இநிஅநி 18 மற்றும் தொடர்புடைய விளக்கங்களின் கீழ் தொடர்ந்து அறிக்கையிடப்படுகிற போதிலும் இநிஅநி 15 ஐ பின்பற்றுதல் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.

இநிஅநி 9 - நிதிக் கருவிகள்

இநிஅநி 39 நிதிக் கருவிகளுக்குப் பதிலாக இநிஅநி 9 நிதிக் கருவிகள்: 2018 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வருடாந்த காலப்பகுதிகளுக்கான இனங்காணல் மற்றும் அளவீடானது நிதிக் கருவிகளுக்கான கணக்கீடு; வகைப்படுத்தல் மற்றும் அளவீடு; நட்டக்கழிவு மற்றும் ஹெட்ஜ் கணக்கீடு ஆகிய அனைத்து மூன்று அம்சங்களையும் ஒன்றாகக் கொண்டுவருகிறது:

கம்பனி இநிஅநி 9 ஐ 2018 ஜனவரி 1 ஆன ஆரம்ப விண்ணப்பத் திகதியுடன் எதிர்காலத்தில் பயன்படுத்தியது. இநிஅநி 39 இன் கீழ் தொடர்ந்து அறிக்கையிடப்படும் ஒப்பீட்டுத் தகவலை கம்பனி மீளக் குறிப்பிட்டிருக்கவில்லை. இநிஅநி 9 ஐ பின்பற்றுவதால் ஏற்படும் வேறுபாடுகள்

நிறுத்தி வைக்கப்பட்ட வருமானங்கள் மற்றும் மூலதனத்தின் ஏனைய கூறுகளில் நேரடியாக இனங்காணப்பட்டிருந்தன.

2020 ஜனவரி 01 இல் உள்ளவாறு				
	இகநி 39			**இகநி 9**
	ஆரம்ப வகைப்படுத்தல்	**பெறுமதி (ரூபா)**	**பெறுமதி (ரூபா)**	**புதிய வகைப்படுத்தல்**
நிதிச் சொத்துக்கள்				
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்	10,277,684	10,277,684	காலக்கழிவுக் கிரயம்
காசு மற்றும் காசிற்கு சமமானவை	கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்	4,575,531	4,575,531	காலக்கழிவுக் கிரயம்

இந்தச் சீராக்கங்களின் தன்மை கீழே விபரிக்கப்பட்டுள்ளது:

(அ) வகைப்படுத்தல் மற்றும் அளவீடு

இநிஅநி 9 இன் கீழ் கடன் கருவிகள் பின்னர் இலாபம் அல்லது நட்டம், காலக்கழிவிடப்பட்ட கிரயம் மூலமான நியாயமான பெறுமதி அல்லது விரிவான வருமானம் (OCI) மூலமான நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. வகைப்படுத்தல் இரண்டு அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டது: சொத்துக்களை முகாமை செய்வதற்கான கம்பனியின் வணிக மாதிரி மற்றும் கருவிகளின் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களானது நிலுவையாக உள்ள அசல் தொகையில் “அசல் மற்றும் வட்டியின் முழுமையான கொடுப்பனவுகளை“ பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பனவாகும்.

கம்பனியின் வணிக மாதிரியின் மதிப்பீடு ஆரம்ப விண்ணப்ப திகதியான 2018 ஜனவரி 1 இல் மேற்கொள்ளப்பட்டது. கடன் கருவிகள் மீதான ஒப்பந்தப் காசுப்பாய்ச்சல்கள் அசல் மற்றும் வட்டியை மாத்திரமே உள்ளடக்கியதா என்பதை மதிப்பிடுதல் சொத்துக்களின் ஆரம்ப இனங்காணலில் உள்ளவாறான உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் செய்யப்பட்டது.

(ஆ) நட்டக்கழிவு

இநிஅநி 9 ஐ பின்பற்றுதலானது இநிஅநி 39 இன் ஏற்பட்ட இழப்பு அணுகுமுறையை முன்னோக்கி பார்த்து எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு (ECL) அணுகுமுறையுடன் மாற்றீடு செய்வதன் மூலம் நிதிச் சொத்துக்களுக்கான நட்டக்கழிவு இழப்புக்களுக்காக கம்பனியின் கணக்கீட்டை அடிப்படை ரீதியாக மாற்றியுள்ளது. இநிஅநி 9 ஆனது இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஒப்பந்த சொத்துக்கள் மூலம் நியாயமான பெறுமதியில் வைத்திருக்காத அனைத்து கடன் கருவிகளுக்கும் ECLs இற்கான படியை கம்பனி இனங்காண்பதை தேவைப்படுத்துகின்றது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டவை கழித்தல்களைக் குறிக்கின்றன.

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

4.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

மோத்த செலவு	பொறி மற்றும் உபகரணம் ரூபா	கட்டிடம் ரூபா.	கணனி மற்றும் உபகரணம் ரூபா.	மோட்டார் வாகனம் ரூபா.	தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் ரூபா.	மொத்தம் ரூபா.
2020 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி	12,499,712	11,718,487	1,586,310	3,798,272	2,192,219	31,795,000
காலப்பகுதியின் போதான சேர்த்தல்கள	410,400	-	-	-	-	410,400
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	12,910,112	11,718,487	1,586,310	3,798,272	2,192,219	32,205,400
திரண்ட பெறுமானத்தேய்வு						
2020 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி	1,520,270	94,064	460,568	143,071	538,094	2,756,067
காலப்பகுதியின் போதான சேர்த்தல்கள்	875,217	681,594	537,768	59,654	219,222	2,373,455
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	2,395,487	775,658	998,335	202,725	757,316	5,129,521
2020 ஜனவரி 1 இல் உள்ளவாறானது	10,979,441	11,624,423	1,125,742	3,655,201	1,654,125	37,329,356
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	10,514,624	10,942,829	587,975	3,595,547	1,434,903	27,075,878

4.5 கற்பனை சொத்துக்கள்

	கணனி மென்பொருள்
<u>கிரயங்கள்</u>	
2020 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி	743,500
காலப்பகுதியின் போதான சேர்த்தல்கள்	-
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	743,500
<u>காலக்கழிவு</u>	
திரண்ட காலக்கழிவு	105,131
காலப்பகுதியின் போதான சேர்த்தல்கள்	84,287
காலப்பகுதிக்கான அறவீடு	189,418
2020 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி	638,369
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	554,082

	குறிப்புக்கள்	31.12.2020 ரூபா.	31.12.2019 ரூா.

5. இருப்புக்கள்

முடிவுறா வேலை		20,688,464	41,017,379
உதிரிப் பாகங்கள்		24,753,482	18,710,515
		45,441,946	59,727,894

6. வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்

வியாபார பெறவேண்டியவை		10,014,352	13,329,910
பெறவேண்டிய பணிக்கொடை – இ.போ.ச		2 63,332	263,332
		10,277,684	**13,593,242**

7. வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்

முற்பணங்கள்	7.1	633,104	980,604
		633,104	**980,604**

8. காசு மற்றும் காசிற்கு சமமானவை

இலங்கை வங்கி		2,525,531	6,451,503
சிறுசெலவு காசு		50,000	50,000
கையிலுள்ள காசோலை		2,000,000	-
		4,575,531	**6,501,503**
கூறப்பட்ட மூலதனம்			
2 சாதாரண பங்குகள் வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்டது		**20**	**20**

9. மானியம்

கூரை திருத்தல்		5,698,630	3,500,000
மானிய காலக்கழிவு ஒதுக்கம்		721,233	-
கட்டிட நிர்மாணம்		-	3,000,000
மின்பிறப்பாக்கி கொள்வனவு		3,500,000	3,500,000
மானிய காலக்கழிவு		(650,000)	(801,370)
பெறவேண்டிய மானியம்		2,000,000	-
பெறப்பட்ட அரசாங்க மானியம்		**11,269,863**	**9,198,630**

10. ஓய்வூதிய நலன் கடப்பாடு - பணிக்கொடை

ஜனவரி 1 இல் உள்ளவாறான ஓய்வூதிய நலன் கடப்பா்டு		7,521,140	11,063,586
செலவினம்	(குறிப்புக்கள் **10.1)**	5,922,695	58,467
ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்		(1,529,725)	(3,600,913)
திசெம்பா் 31 இல் மீதி		**13,443,835**	**7,521,140**
செலுத்த வேண்டிய ஓய்வூதிய கடப்பாடு		2,655,285	1,529,725
திசெம்பா் 31 இல் மீதி		10,788,550	5,991,416

10.3 விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட செலவினம்

வட்டிக் கிரயம்		1,150,221	1,237,450
ஆண்டிற்கான அறவீடு		663,584	706,269
எடுகோள்களில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழுகின்ற (இலாபம்)/ நட்டம்		4,108,889	(1,885,252)
		5,922,694	**58,467**

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

	குறிப்புக்கள்	31.12.2020 ரூபா.	31.12.2019 ரூபா.
11. வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்			
வியாபார செலுத்த வேண்டியவைகள்		9,999,365	13,450,230
அட்டுறு செலவினங்கள் மற்றும் ஏனையவை	11.1	10,173,454	8,007,029
		20,172,819	**21,457,259**

11.1 அட்டுறு செலவினங்கள் மற்றும் ஏனையவைகள்

சம்பளம் மற்றும் கூலிகள்		2,534,851	2,539,075
ஊழியர் சேமலாப நிதியம்		743,814	775,789
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்		101,169	105,529
ஊக்குவிப்பு படி		74,951	15,824
ஒப்பந்த கூலிகள்		337,751	303,342
ஊழியர் நலன்புரி சங்கம் - லக்திவ		12,200	28,700
- இலங்கை போக்குவரத்து சபை		12,250	1,400
- CTB		1,400	1,400
சம்பள கழிப்பனவு – ஊழியர் கடன்கள் (வங்கி கடன்கள்)		517,796	272,773
- செலுத்த வேண்டிய தண்டப்பபண நிதியம்		54,671	59,871
- சங்கம்		5,335	5,665
- முத்திரைத் தீர்வை		1,815	4,590
செலுத்த வேண்டிய பணிக்கொடை		2,655,285	1,529,725
கணக்காய்வு கட்டணங்கள்		619,279	319,279
தொலைபேசி		22,067	12,132
மின்சாரம்		264,809	164,496
பாதுகாப்பு		388,500	664,578
ஒப்பந்ததாரர் வைப்பு		1,282,500	1,028,750
சிற்றுண்டிச்சாலை வைப்புக்கள்		17,500	17,500
செலுத்த வேண்டிய தலைவர் கட்டணம்		262,500	-
மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு		230,000	125,000
இலங்கை போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகம்		33,011	33,011
	11	**10,173,454**	**8,007,029**

	குறிப்புக்கள்	2020 ரூபா.	2019 ரூபா.
12. வருமானம்			
பழுதுபார்த்தல் வருமானம்		130,487,008	187,762,153
		130,487,008	**187,762,153**
13. விற்பனை கிரயம்			
ஆண்டின் ஆரம்பத்தில் முடிவுறா வேலை		41,017,379	34,731,125
1-1 இருப்புக்கள்		18,710,515	3,739,450
விற்பனைக் கிரயம்	13.1	109,877,679	150,836,321
12-31 இருப்புக்கள்		(24,753,482)	(18,710,515)
ஆண்டின் இறுதியில் முடிவுறா வேலை		(20,688,464)	(41,017,379)
		124,163,626	**129,579,002**
13.1 உற்பத்தி கிரயம்			
நேரடி மூலப்பொருட்கள்		47,935,429	74,353,774
நேரடி உழைப்பு	13.2	33,611,813	32,718,174
ஊழியர் சேமலாப நிதியம்		3,011,823	2,713,893
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்		752,957	678,383
பேரூந்து பழுதுபார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் (வெளியக மூலம்)		21,850,600	36,657,280
ஊக்குவிப்பு படி		1,839,840	3,048,431
பெறுமானத்தேய்வு – பொறி மற்றும் உபகரணம்		875,217	666,385
	13.1	**109,877,679**	**150,836,321**
13.2 நேரடி உழைப்பு			
சம்பளம் மற்றும் கூலிகள்		24,317,692	20,324,001
நிலுவை சம்பளங்கள்		-	136,118
படி		-	5,705
வாழ்க்கைச் செலவு படி		5,734,248	5,159,856
மேலதிகநேரம்		135,017	183,161
நாளாந்த சம்பளம்		3,424,856	6,909,333
	13.1	**33,611,813**	**32,718,174**
14. ஏனைய வருமானம்			
மானிய காலக்கழிவு (குறிப்பு 9)		650,000	801,370
சிற்றுண்டிச்சாலை வருமானம்		-	35,000
நிலையான வைப்பு வட்டி		437,740	502,688
கேள்விக் கட்டணங்கள்		37,500	57,000
நானவிதம்		50	18,430
கழிவு விற்பனை		20	4,525,630
வழங்குநர் பதிவு வருமானம்		109,500	81500
		1,234,810	**6,021,617**

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

	குறிப்புக் கள்	2020 ரூபா.	2019 ரூபா.
15. நிர்வாகச் செலவினங்கள்			
சம்பளம் மற்றும் கூலிகள்	15.1	12,728,566	11,803,465
பணிப்பாளர்களின் சம்பளம்	15.2	888,505	1,997,578
ஊழியர் சேமலாப நிதியம்		2,125,711	1,796,077
ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்		531,428	449,109
பதில் கடமை படி		307,760	184,079
பணிக்கொடை		5,922,695	58,467
ஊழியர் நலன்புரி		402,910	910,761
மின்சாரம்		1,547,240	2,882,398
தொலைபேசி		137,508	176,787
வீத வரிகள்		42,560	85,080
வாகன காப்புறுதி		2,655	69,197
பாதுகாப்பு		5,492,298	7,932,159
கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு		-	2,987,225
வாகன திருத்தம்		284,745	1,222,854
எரிபொருள்		671,462	981,553
காகிதாதி		279,060	549,700
மொழிபெயர்ப்பு கட்டணங்கள்		10,600	55,100
உடன்படிக்கை கட்டணங்கள்		-	12,500
தபால் கட்டணம்		1,650	4,060
கணக்காய்வுக் கூட்ட கட்டணங்கள்		75,000	237,500
கணக்காய்வுக் கட்டணங்கள்		300,000	299,805
செயலக கட்டணங்கள்		110,000	115,000
சட்ட கட்டணங்கள்		-	76,030
அன்பளிப்பு		-	33,600
சுகாதாரம்		240,963	4,667
அலுவலக பராமரிப்பு செலவினங்கள்		116,855	1,464,917
விளம்பரம் மற்றும் பிரசித்தப்படுத்தல்		171,293	60,806
மிகையூதியக் கட்டணங்கள்		-	1,114,000
வருடாந்த பொதுக் கூட்ட கட்ணங்கள்		-	74,386
பரீட்சிப்புக் கட்டணங்கள்		-	7500
கம்பனி பதிவுசெய்தல் கட்டணம்		-	34,190
பாதுகாப்பு உபகரணம்		-	443,730
பெறுமானத்தேய்வு			
கட்டிடங்கள்		681,594	94,064
கணனி மற்றும் உபகரணங்கள்		537,768	229,021
மோட்டார் வாகனம்		59,654	59,654
தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம்		-	219,222
மென்பொருள் காலக்கழிவு		84,287	51,698
		33,754,766	**38,777,939**

	குறிப்புக்கள்	2020 ரூபா.	2019 ரூபா.
15.1 சம்பளம் மற்றும் கூலிகள்			
சம்பளம் மற்றும் கூலிகள்		9,199,865	8,526,782
சம்பள நிலுவைகள்		-	64,290
வாழ்க்கைச் செலவு படி		3,498,300	3,043,196
மேலதிகநேரம்		30,401	169,198
	15	**12,728,566**	**11,803,465**
15.2 பணிப்பாளர்களின் சம்பளங்கள்			
எரிபொருள் படி		96,610	369,213
பணிப்பாளர் கட்டணங்கள்		678,233	1,348,750
தொலைபேசி கட்டணங்கள்		13,102	61,925
பணிப்பாளர் பயணம்		96,610	213,000
பணிப்பாளர்கள் உபசரணை செலவு		3,950	4,690
	15	**888,505**	**1,997,578**

	2020 ரூபா.	2019 ரூபா..
16. விநியோகக் கிரயங்கள்		
பயணம் மற்றும் போக்குவரத்து	76,095	126,710
வாகன வாடகை	-	983,333
கண்காட்சி கட்டணங்கள்	-	197,460
இயந்திர திருத்தம்	-	30,000
	76,095	**1,337,503**
17. நிதி கிரயங்கள்		
வங்கி மேலதிகப்பற்று மீதான வட்டி	27,363	74,668
வங்கி கட்டணங்கள்	26,250	58,321
	53,613	**132,989**
18. வருமான வரிச் செலவினம்		
சாதாரண நடவடிக்கைகள் மீதான வரி	-	-

19. அறிக்கையிடல் காலப்பகுதி முடிவடைந்த பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவைப்படும் நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்படவில்லை.

20. நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் மூலதன கடப்பாடுகள்

நிதி நிலைமைக் கூற்று திகதியில் உள்ளவாறு பொருண்மையான நிகழத்தக்க பொறுப்புக்கள் அல்லது மூலதன கடப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை.

20.1 அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இந் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல் தேவைப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

21. நிதி இடர் முகாமைத்துவம்

அறிமுகம் மற்றும் பகுப்பாய்வு

நிதி இடரானது திரவத்தன்மை இடர், நாணய இடர் மற்றும் வட்டி விகித இடர் ஆகியவற்றிலிருந்து எழுகின்ற வருமானம் மற்றும் / அல்லது மூலதன நிலைமைக்கு சாத்தியமான நட்டத்தை உள்ளடக்குகின்றது. எனவே, திரவத்தன்மை நிலைமையைக் கண்காணித்தல் மற்றும் எதிர்கால பணத் தேவைப்பாடுகளை முறையான முன்னறிவிப்பு மூலம் மதிப்பிடுதல், பொருத்தமான வங்கிகளுடன் நீண்டகால நிலுவைத் தொடர்புகளை பேணுதல் மற்றும் பல்வகைப்பட்ட நிதி முறைமைகளைப் பேணுதல் என்பவற்றின் மூலம் இடரைத் தணிக்கும் நிலைமையில் முகாமைத்துவம் உள்ளது. கம்பனி குறுங்கால கடன்களுக்கான நிலையான கால வட்டி விகித ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டிருந்தது. மேலும் இதன் மூலம் வட்டி விகித இடரை குறைக்க முடியும். சாத்தியமான நட்டங்களை குறைப்பதற்கு சார்பு செயலில் உள்ள செயல்களுக்கான ஏற்ற இறக்கங்களை முகாமைத்துவம் தொடர்ந்து கண்காணிக்கிறது.

கம்பனியின் முகாமைத்துவம் இடர்களின் அளவு மற்றும் பரப்பு மூலமான வெளிப்பாடுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான நிதி இடர்களை தொடர்ந்து கண்காணித்து முகாமை செய்கின்றது. இந்த இடர்களில் சந்தை இடர் (நாணய இடர், வட்டி விகித இடர் மற்றும் மூலதன விலை இடர் உட்பட), கடன் இடர் மற்றும் திரவத்தன்மை இடர் ஆகியவை உள்ளடங்குகின்றன.

21.1 சந்தை இடர்

சந்தை இடரானது அந்நியச் செலாவணி விகிதங்கள், வட்டி விகிதங்கள் மற்றும் மூலதன விலைகள் போன்ற சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் கம்பனியின் வருமானம் அல்லது அதன் நிதிக் கருவிகளின் வைத்திருக்கும் பெறுமதி என்பவற்றை பாதிக்கும் இடராகும். சந்தை இடர் வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுருக்களுக்குள் முகாமை செய்து கட்டுப்படுத்தும் அதே நேரம் வருமானத்தை மேம்படுத்துதல் சந்தை இடர் முகாமைத்துவத்தின் நோக்கமாகும்.

கம்பனியின் செயற்பாடுகள் வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்கள், வட்டி விகிதங்கள் மற்றும் மூலதன விலைகளில் ஏற்படும் மாற்றங்களின் நிதி இடர்களை முதன்மையாக வெளிப்படுத்துகின்றன.

f) வெளிநாட்டு நாணய இடர்

கம்பனியானது இலங்கை ரூபாவைத் தவிர வேறு நாணயத்தில் பெறப்படும் கொள்வனவுகளின் மீதான நாணய இடரை வெளிப்படுத்துகிறது. இந்த கொடுக்கல் வாங்கல்களில் முதன்மையாக குறிப்பிடப்படும் வெளிநாட்டு நாணயங்கள் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (USD) ஆகும். 2018 திசெம்பர் 31 மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்படும் வியாபார செலுத்த வேண்டியவை பூஜ்ஜியமாகும். எனவே, கம்பனி வெளிநாட்டு நாணய இடரிற்கு உள்ளாகவில்லை.

g) வட்டி விகித இடர்

வட்டி விகித இடர் என்பது சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களால் நிதிக் கருவியின் நியாயமான பெறுமதி அல்லது எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் தளம்பலாக இருக்கும் இடர் ஆகும். சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களின் இடரிற்கு கம்பனியின் வெளிப்பாடு முதன்மையாக கம்பனியின் குறுங்கால கடன் பொறுப்புடன் தொடர்புபடுகின்றது. வட்டி விகித இடர்களிற்கான வெளிப்பாடுகளை முகாமை செய்வதற்கு கம்பனி பல்வேறு நிதிக் கருவிகளைப் பயன்படுத்துகிறது. ஆறிக்கையிடல் தினத்தில், வட்டியுடனான நிதிக் கருவிகள் பூஜ்ஜியமாக உள்ளதுடன் கம்பனியின் வட்டி விகித இடரிற்கு உள்ளாகவில்லை.

h) பங்கு விலை ஆபத்து

பங்கு விலை ஆபத்தானது சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக நிதி கருவி ஒன்றின் பெறுமதி தளம்பலடைந்து இருக்கும் இடராகும், அந்த மாற்றங்கள் தனிப்பட்ட பிணை அல்லது அதை வழங்குபவர் அல்லது சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் அனைத்து பிணைகளையும் பாதிக்கும் காரணிகளால் ஏற்படுகின்றனவா என்பதாகும்.

பங்கு முதலீடு இல்லாததால் கம்பனி பங்கு இடரிற்கு உள்ளாகவில்லை.

21.2 கடன் இடர்

கடன் இடரானது வாடிக்கையாளர் ஒருவர் தனது ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றத் தவறினால் கம்பனிக்கு நிதி நட்ட இடராக காணப்படுகின்றதுடன், இது முக்கியமாக வாடிக்கையாளர்களிடமிருந்து கம்பனியிக்கு பெற வேண்டியவைகளிலிருந்து எழுகின்றது.

கடன் இடர் வெளிப்பாடு

நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லும் தொகை அதிகபட்ச கடன் வெளிப்பாட்டைக் குறிக்கிறது. அறிக்கையிடல் திகதியில் கடன் இடரின் அதிகபட்ச வெளிப்பாடு பின்வருமாறு காணப்பட்டது;

திசெம்பர் 31 இல் உள்ளவாறு	2020	2019
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	10,277,684	13,593,242
வங்கி மற்றும் நிலையான வைப்பு மீதிகள்	11,157,390	12,645,622
	21,435,074	26,238,864

வியாபார பெற வேண்டியவைகள்

கடன் இடரிற்கான கம்பனியின் வெளிப்படுத்தல் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தனிப்பட்ட குணாதிசயங்களால் முக்கியமாக பாதிக்கப்படுகிறது. முகாமைத்துவம் கடன் கொள்கையொன்றை நிறுவியுள்ளது, அதன் கீழ் ஒவ்வொரு புதிய வாடிக்கையாளரும் கம்பனியின் நிலையான கொடுப்பனவு மற்றும் வழங்கப்பட்ட விநியோக விதிமுறைகளுக்கு முன்னர் கடன் தகுதிக்காக தனித்தனியாக பகுப்பாய்வு செய்யப்படுகிறனர்.

எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை அளவிடுவதற்கு நிதியேற்பாட்டு மூலத்தை பயன்படுத்தி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் நட்டக்கழிவு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஏற்பாட்டு விகிதங்கள் பல்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளின் ஒரே மாதிரியான இழப்பு முறைகளுடன் (அதாவது, புவியியல் பிராந்தியம், தயாரிப்பு வகை, வாடிக்கையாளர் வகை மற்றும் மதிப்பீடு மற்றும் கடன் கடிதங்கள் அல்லது ஏனைய கடன் காப்புறுதி நடைமுறைகள் மூலமான மேவுகை) குழுக்களின் கடந்த நாட்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. நிகழ்தகவு-கூட்டப்பட்ட விளைவு, பணத்தின் காலப் பெறுமதி மற்றும் கடந்த கால நிகழ்வுகள், தற்போதைய நிலைமைகள் மற்றும் எதிர்கால பொருளாதார நிலைமைகளின் முற்கணிப்புக்கள் தொடர்பாக அறிக்கையிடல் திகதியில் கிடைக்கும் நியாயமான மற்றும் ஆதரவான தகவல்கள் ஆகியவற்றை கணிப்பீடு பிரதிபலிக்கிறது.

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

21.3 திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடரானது கம்பனி அதனது நிதிப் பொறுப்புகளுடன் தொடர்புடைய கடப்பாடுகளை எதிர்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்ளும் இடர் ஆகும், இது பணம் அல்லது மற்றொரு நிதிச் சொத்தை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகிறது. திரவத்தன்மையை முகாமை செய்வதற்கான கம்பனியின் அணுகுமுறையானது ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புகளை ஏற்படுத்தாமல் அல்லது கம்பனியின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்காமல், இயல்பான மற்றும் அழுத்தமான நிலைமைகளின் கீழ் அதன் பொறுப்புகளை எதிர்கொள்வதற்கு போதுமான திரவத்தன்மையை எப்போதும் வைத்திருப்பதை சாத்தியமானளவு உறுதிப்படுத்துவதாகும்.

22. நியாயமான பெறுமதி அளவிடுதல்

கம்பனி பின்வரும் நியாயமான பெறுமதி படிநிலையைப் பயன்படுத்தி நியாயமான பெறுமதிகளை அளவிடுகிறது, இது அளவீடுகளைச் மேற்கொள்வதில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது.

நிலை 1: ஒரே மாதிரியான கருவிக்காக செயற்பாட்டில் உள்ள சந்தையில் குறிப்பிடப்பட்ட சந்தை விலை (சீர்செய்யப்படாதது)

நிலை 2: அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் அடிப்படையிலான மதிப்பீட்டு நுட்பங்கள்.

நிலை 3: குறிப்பிடத்தக்க அவதானிக்க முடியாத உள்ளீடுகளைப் பயன்படுத்தும் மதிப்பீட்டு நுட்பங்கள்

23. தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புடைய தரப்பினரை இனங்காணல்

இலங்கை கணக்கீட்டு நியமம் - (LKAS) 24 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்களின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் என வரையறுக்கப்பட்ட தரப்பினருடன் சாதாரண வணிகப் போக்கில் கம்பனி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கிறது.

(i) முக்கிய முகாமைத்துவ பதவியணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

முக்கிய முகாமைத்துவ ஆளணியானது கம்பனியின் பணிப்பாளர்களை கொண்டுள்ளது.

(ii) பணிப்பாளர்களுக்கான கடன்கள்

கம்பனியின் பணிப்பாளர்களுக்கு நிதிக் காலப்பகுதியிலோ அல்லது காலப்பகுதியின் இறுதியிலோ கடன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முக்கிய முகாமைத்துவ பதவியணி இழப்பீடு

கம்பனியின் முக்கிய முகாமைத்துவ ஆளணிக்கு/ அதன் சார்பாக எந்தவொரு இழப்பீடும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

தொடர்புடைய தரப்பினர் பெயர்	தொடரபின் தன்மை	கொடுக்கல்வாங்கல் விபரம்	2018.12.31 இல் உள்ளவாறான மீதி	மாதத்தின் போதான கொடுக்கல் வாங்கல்கள்	2019.12.31 இல் உள்ளவாறான மீதி
			ரூபா .	ரூபா .	ரூபா .
-					
இலங்கை போக்குவரத்து சபை	அரச உடமையாக்கப்பட்டது	பேரூந்து திருத்தங்கள்	1,645,642	130,487,008	
		பெறப்பட்ட கொடுப்பனவு		(122,118,298)	**10,014,352**
		பெறவேண்டிய பணிக்கொடை	263,332	-	**263,332**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

CTPA/LEC/06/FA/2020 2021 ஆகஸ்ட் 17

தலைவர்
லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் : செயலாளர் - வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்து போக்குவரத்துச் சேவைகள், புகையிரத பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு – அ.பொ

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

CTPA/LEC/06/FA/2020 2021 ஆகஸ்ட் 17

தலைவர்
லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, கம்பனியின் நிதின்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கம்பனியின் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சொத்துக்களின் மீதி ரூபா 27,075,878 தொகையான நிலையான சொத்துக்களில் அடங்கியுள்ள ரூபா 8,290,423 தொகைக்கான சொத்துக்களின் கொள்வனவு செய்திருந்த ஆண்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதே போல் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் அந்த சொத்துக்களுக்காக மீளாய்வாண்டு வரை பெறுமானத்தேய்வு கணித்தல் மேற்கொள்ளப்பட்டு இருக்காமையால் ஆண்டிற்கான இலாபம் அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் ரூபா 4,575,531 தொகை எனினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 2,575,531 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 2,000,000 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசம் அரச மானியம் என கிடைத்திருந்த ரூபா 2,000,000 இற்கான காசுப் பாய்ச்சல் கூற்றின் நிதி தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்த காசின் கீழ் காட்டப்படாமையால் ஏற்பட்டிருந்தது.

(இ) உற்பத்திக் கிரயத்தினை கணிப்பீடு செய்யும் போது தொழிற்சாலையின் பிரதான வலுச்சகத்தி மூலமான மின்சாரத்தினை மேந்தலைச் செலவினத்திற்காக நியாயமான அடிப்படை ஒன்றின் அடிப்படையில் உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மின்சாரச் செலவினமான ரூபா 1,547,240 தொகையினுள் அவ்வாறு உள்ளடக்கப்பட வேண்டிய செலவினமொன்று உள்ளடக்கப்பட்டிருந்தமையால், உற்பத்திக் கிரயம் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 கம்பனியின் 2020 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் நான் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பிலான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதால் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டும்.

நிதிக்கூற்றுகள் தொடர்பிலான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன் நான் அது தொடர்பில் எந்த விதமான சான்றுபடுத்தல் அல்லது அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுகள் தொடர்பில் எனது கணக்காய்விற்கு உரியதாக எனது பொறுப்பாவது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய போது அவற்றை வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும் போது ஏனைய தகவல்கள் நிதி கூற்றுக்கள் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு எந்த விதத்திலாவது பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் அடிப்படையில் பொறுமையாக பொருந்தவில்லையா என்பதை கருத்தில் கொள்வதே ஆகும்.

கம்பனியின் 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான தவறுகள் எதனையும் நான் அவதானித்தால் அதனை திருத்துவதற்கு ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அதனை அறிவிக்க வேண்டும். தொடர்ந்தும் திருத்தப்படாத தவறுகள் காணப்பட்டால் அவற்றை அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைக்கமைய என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியினைத் தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கான திறனை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன், முகாமைத்துவம் கம்பெனியை கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயல்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் எண்ணகிகரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் கம்பெனியின் தொடர்ந்து இயங்குவதற்கு உரியதான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயல்பாடுகள் தொடர்பாகப் பரீட்சிப்பு செய்யும் பொறுப்பு, நிர்வாகத் தரப்பினரினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனிஅதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

02. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச்சட்டத்தில் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கம்பனியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

2.1.1 கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கும்.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகள் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

2.1.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகள் பிரகாரம் 1.2 இ, ஈ, க, 2.2.2. இ, ஐ பந்திகளின் அவதானிப்புகள் நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே நிறுவகத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

சட்டங்கள், விதிகளுக்கான / கட்டளைகளுக்கான தொடர்பு	அவதானிப்பு
(அ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 (அ) பிரிவு	வாகனங்களின் சேவை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களினால் அதற்குரிய அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி வரையும் அந்த அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
(ஆ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 60	கம்பனி ஒன்று வருமான வரி செலுத்துவதற்காக சட்டத்தினால் கடப்பாடு அடைந்திருப்பதுடன், கம்பனி 2020 திசெம்பர் 31 திகதி கணக்காய்வுத் திகதி வரை குறிப்பிட்ட தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.
(இ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை	திறைசேரியினால் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்பு திட்ட முறைமையொன்று பேணப்படாமல் மீளாய்வாண்டின் போது ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 1,839,840 இற்கான தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. அதே போல் இந்தப் பெறுமதியுள் அடங்கியுள்ள ரூபா 795,600 இற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு தொழிற்சாலை பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அங்கு எதிர்பார்த்த கால இலக்குகளை பூரணப்படுத்தியிருக்காத போதும் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.
(ஈ) 2000 இன் 33 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்	
(i) பிரிவு 39(1)	தொழிற்சாலையில் கடமையாற்றும் ஆட்களுக்காக ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் தீ ஒன்று ஏற்பட்ட போது நியாயமான முறையில் தேவைப்படும் தப்பி செல்லக் கூடிய வழி வழங்கப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.
(ii) பிரிவு 42அ(1)	அனைத்து தொழிற்சாலைகளிலும் தீ அணைக்கும் உபகரணங்கள் அதற்காக தயாரிக்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்க வழங்கியிருக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனியினால் இந்த செயற்பாடுகள் ஏதும் கடைபிடித்திருக்கவில்லை.
(iii) 50(1) பிரிவு	உரிய நியமொன்றின் பிரகாரம் முதலுதவிப் பெட்டியொன்று அல்லது றாக்கையொன்று

		இலகுவில் அடையக்கூடிய வகையில் பேணப்பட வேண்டிய போதிலும், கம்பனி அது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.
(உ)	2006 பெறுகை வழிகாட்டல் கோவையின்	
	(i) பிரிவு 3.2	மீளாய்வாண்டின் போது பஸ் வண்டிகளின் திருத்த வேலைகளுக்காக ரூபா 74,935,429 தொகை பெறுமதியான உதிரிப் பாகங்கள் தனியார் கம்பனிகளில் இருந்து கொள்வனவு செய்திருந்ததுடன் அதற்காக தேசிய மட்டத்தில் போட்டி விலைகூறல் அழைக்கப்பட்டு கூறுவிலைகள் மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
	(ii) பிரிவு 3.4.3	விளம்பரங்கள் வெளியிடுதல் பொருளாதார ரீதியாக அனுகூலமற்ற நிலைமை உடைய குறைந்த பெறுமதியுடைய விடயங்கள் பெறுகை செய்வதற்காக அல்லது வழமையாக பயன்படுத்தும் ஒவ்வொரு விடயங்களையும் கொள்வனவு செய்வதற்காக விண்ணப்பதாரிகளை பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டு அவ்வாறு பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கக் கூடிய வழங்குனர்களின் பெயர்கள் அடங்கிய அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
	(iii) பிரிவு 4.2	பிரதான பெறுகைத் திட்டம் ஒன்று மற்றும் பெறுகை நேரசூசி ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புகள் நீங்கலாக சபையின் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும், விளைதிறன் கொண்டதாகவும் உரிய காலப்பகுதியில் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(அ) பெறுகைப் பிரிவில் பேணப்பட்டு வருகின்ற பிரதான பின்காட் பத்திரங்கள் நாளதுவரை ஆக்கப்படாமை மற்றும் வழமையாக பயன்படுத்தப்படாத பண்டங்களுக்காக இருப்பு மட்டத்தை பேணிச் செல்வதை கவனம் செலுத்தாமல் பாதுகாப்பு இருப்பு (Buffer stock) மட்டம் காணப்படாமையால் திடீர் கொள்வனவுகள் சுமார் ரூபா 38,348,373 தொகை ஆகியிருந்ததுடன் அது மொத்தக் கொள்வனவுகள் 80 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு இந்தத் திடீர் கொள்வனவுகள் காரணமாக இருந்தது. மேலும் பின்கார்ட் பத்திரங்களை பரிசோதனை செய்த போது தற்போது பயன்படுத்தப்படாத 90 விடய இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2020 ஆம் ஆண்டில் 106 பஸ் வண்டிகள் திருத்த வேலைக்காக வேலைத்தளத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 27 பஸ்களுக்கான திருத்த வேலைகள் ஏதும் 2021 மார்ச் 18 திகதி வரை மேற்கொள்ளப்படாமல் 03 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலம் வேலைத் தளத்தில் நிறுத்தப்பட்டு இருந்ததுடன், அவை திருத்த வேலைக்காக கிடைத்திருந்த பஸ் வண்டிகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் ஆகும். மீதியான 79 பஸ் வண்டிகள் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக 02 மாதங்கள் முதல் 01 வருடம் வரையான காலமொன்று செலவிடப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட திருத்த வேலைகளுக்காக ஊழியமானது ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்டிருந்தது.

(ஆ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 121 தொகையாக இருந்ததுடன், அவற்றில் 96 ஊழியர் நிரந்தர அடிப்படையிலும் 12 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் சேர்க்கப்பட்டிருந்தது. கம்பனியின் பிரதான முகாமை பதவியாகிய பொதுமுகாமையாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்கி இருக்காததுடன் தொழிற்சாலை பொறியியலாளர் பதவியும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தது. கம்பனியின் முகாரி (போர்மன்) 06 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 03 தொகை 2021 பெப்ரவரி வரை வெற்றிடமாகக் காணப்பட்டது.

(இ) முகாமைத்துவத் திணைக்களத்தின் டீஎம்எஸ்/1623 இலக்கங் கொண்ட மற்றும் 2018 ஒக்தோபர் 03 திகதிய கடிதத்தின் படி கம்பனியின் புதிய ஊழியர் கட்டமைப்பிற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கம்பனியின் 04 பதவிகளுக்காக நீண்டகாலமாக அணவல் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் நிரந்தர உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை 20 ஆகக் காணப்பட்ட போதிலும் உள்ளவாறான தொழிலாளர் எண்ணிக்கை 62 ஆகக் காணப்பட்டமையால் 42 தொகை அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(உ) 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டில் ரூபா 1,400,559 தொகை பெறுமதியான 86 விடயங்கள் புத்தக மீதியை விட மிகையாக காட்டப்பட்டதுடன், ரூபா 244,631 தொகை பெறுமதியான 51 விடயங்கள் குறைவாக காட்டப்பட்டிருந்தது

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இலக்கம் - LEC/AC/AQU/2019
2021/08/30

கணக்காய்வு அத்தியட்சகர்,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72,
பொல்தூவ வீதி,
பத்தரமுல்ல

<u>லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் 2021/08/17 ஆந் திகதிய சீடீபீஏ/எல்ஈசீ/06/எப்ஏ/2020 ஆம் இலக்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பானது.</u>

1.2

(அ) லக்திவ என்ஜினியரிங் கம்பனி ஆரம்பம் முதல் நிலையான சொத்துக்களின் பெறுமதியினுள் இனங்காணப்படாத ரூபா 8,290,423 ஆன பெறுமதி இறுதிக் கணக்குகளில் மீதியொன்றாக முன்கொண்டுவரப்பட்டிருந்த காரணத்தால் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அறிவுரைக்கமைய அந்த பெறுமதியினுள் உள்ள நிலையான சொத்துக்களை இனங்காணுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அந்த குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த ரூபா 8,290,423 தொகைக்குரிய சொத்துக்கள் இனங்காணப்பட்டதுடன், அந்த சொத்துக்களின் பயன்படு ஆயட்காலத்தினை இனங்காண முடியாத காரணத்தால் பெறுமானத் தேய்விட முடியாதிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டின் போது அந்த சொத்துக்களின் பெறுமதிகள் மீள இனங்காணப்பட்டு அவற்றை புத்தகங்களுக்கு எடுப்பதற்கு அல்லது எடுக்காதிருப்பதற்க உரிய சரியான நடவடிக்கை எடுக்கின்றேன்.
(பின்னிணைப்பு I)

(ஆ) I/II)
பெறுமானத் தேய்வுக் கணிப்பீடானது சரியான பேரேட்டில் சீராக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பேரேட்டின் சீராக்கங்களுடன் புதிய பேரேடு இணைக்கப்பட்டுள்ளது.
(பின்னிணைப்பு II)

வாழ்க்கைப்படி கொடுப்பனவு

உற்பத்திக் கிரயத்தினை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவினமாக கைத்தொழில் பிரிவிற்கு உரியதாக ரூபா 5,734,248 குறிப்பிடப்பட்டுள்ளதுடன், நிர்வாகச் செலவினத்தினுள் ரூபா 3,498,300 குறிப்பிடப்பட்டுள்ளது. (9,232,548(5,734,248 + 3,498,300)
எரிபொருள் செலவினம் ரூபா 495,852 சரியாக நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

(III) உபகரண பழுதுபார்த்தல், முதலுதவிச் செலவினம், காப்புறுதி, பராமரிப்புச் செலவினம், ஏனைய செலவினம், மேலதிக படிகய், தபால் கட்டணங்கள், அச்சீட்டு மற்றும் எழுதுகருவி மேலதிகப் படிகள், கணக்காய்வுக் குழுவின் போக்குவரத்துச் செலவினம், பணிப்பாளர் சபையின் செலவினம், பழுதுபார்த்தல் செலவினம், உபசரணைச் செலவினம், உடன்படிக்கைக்

கட்டணம் உரிய பேரேட்டின் மீதிகள் சரியான நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளது. ரூபா 64,609 தொகையான நிலுவை உற்பத்திக் கிரயத்தினுள் சீராக்கப்பட்டுள்ளது. உதிரிப்பாகங்களுக்கு உரிய ரூபா 12,415,599 ஆன தொகை உற்பத்திக் கிரயத்தினுள் நேர் பொருட்களினுள் ரூபா 47,935,429 இல் சீராக்கப்பட்டுள்ளது.

(iv) குறித்த இருப்பின் மற்றும் முற்பணங்களின் கணக்குக் குறிப்புகளில் குறித்த சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளது.

(V) 2020-12-31 ஆந் திகதியில் உள்ளபடியாக 02 மில்லியன் தொகையானது காசு மற்றும் காசுக்கு சமனானவற்றினுள் சீராக்கப்பட்டுள்ளது.

(VI) உற்பத்திக் கிரயத்திற்காக மின்சாரச் செலவினத்தை 2021 ஆம் ஆண்டில் சரியான கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.

02. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

அ)2) எதிர்காலத்தில் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்குமைய செயற்படுகின்றேன்.

அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(i) 2020 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொண்ட பொருள் மெய்மையாய்வின் போது புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டிராத போதிலும், எதிர்காலத்தில் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குறித்த இருப்பு மெய்மையாய்வுச் சபையின் புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ii) தற்போது பயன்படுத்தப்படாத உருப்படிகளை இருப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(iii) 2020 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் நிதி இடர்பாட்டின் மத்தியில் உரிய முறையில் பாதுகாப்பு இருப்பினை பேணுவதற்கு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாதிருந்ததுடன், எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கின்றேன்.

(iv மற்றும் v)
பல வருடங்களாக பயன்படுத்தப்படாத இருப்பு அட்டைகளில் உள்ள உருப்படிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(iv) 23 ஸ்ரீ 3872 இலக்கமுடைய மோட்டார் வாகனம் மற்றும் 61-9401 கிரேட்வோல் ஆகியவற்றின் உரித்தினை பெற்றுக்கொள்ள அல்லது பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு பொருள் மெய்மையாய்வுச் சபையொன்றை நியமித்து அதற்கான பணிகள் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்கின்றேன்.

(ஆ) I)II) 2021 ஆம் ஆண்டு முதல் தனியார் ஒப்பந்ததார்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 1,000 படியாக தாமதக் கட்டணம் அறவிடப்படும்.

(I)/III) 2020 ஆம் ஆண்டினுள் கிடைத்த பேரூந்துக்களின் செயன்முன்னேற்றத்திற்கு உரிய செயன்முன்னேற்ற மீளாய்வு அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (III)

(03) அ) பதவியணி நிர்வாகம்

(i) கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டவுடன் கம்பனிக்கு பொருத்தமானவாறு உரிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்கின்றேன்.

(II)(III)/(IV)
2021 ஆம் ஆண்டின் ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.

(V) பணிப்பாளர் சபை 87/2020/07/4.3 இன் பிரகாரம் எஸ்.கே. அநுர குமார் அவர்களின் ஒப்பந்த சேவைக்காலம் 2020/10/19 ஆந் திகதி முதல் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டு தகுதிவாய்ந்த பொறியியலாளர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்படும் வரையிலும், அநுர அவர்களின் சேவைக் காலம் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதுடன், 2019/07/01 ஆந் திகதி தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் எஸ்.கே. அநுர குமார அவர்களுக்கு 2019/07/01 ஆந் திகதி முதல் ரூபா 3,000.00 தொகை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொறியியலாளர்	நிர்வாக உத்தியோத்தர்	கணக்காளர்	தொகுப்பு உத்தியோகத்தர்

தலைவர்
குஷான் வேகொடபொல
கணக்காளர்
வ/ப லக்திவ இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிடட் கம்பனி
ஏகல